இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 298 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 25 – ஞாயிற்றுக்கிழமை 08 ஜூன் 2025 – திருச்சி ★★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 298 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 25 - Sunday 08 June 2025 - Trichy ★★ 8 Pages ₹ 5.00





முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (6.6.2025) சென்னை – தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர்கள் தேர்தலில் போட்டியிடும் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (என்ற) கவிஞர் சல்மா ஆகியோர் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான பி.சுப்பிரமணியனிடம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர். இந்த நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்களவை கழகக் குழுத்தலைவரும் கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற கழகக் குழுத்தலைவரும், கழக துணைப் பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.ராஜேந்திரன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் செல்வப் பெருந்தகை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைவர் பெ.சண்முகம், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இந்திய தேசிய முஸ்லிம் லீக் சார்பில் அபூபக்கர், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணைய முன்னாள் தலைவர் வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும்

# கழக வேட்பாளர்கள் - முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் வேட்பு மனு தாக்கல்!

## கழக ஆதரவுடன் மக்கள் நீதி மய்யத் தலைவர் - கலைஞானி கமல்ஹாசன் வேட்பு மனு!

**சென்னை, ஜூன் 8 -**

**மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் - மூத்த வழக்கறிஞர் பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா ஆகியோர் நேற்று முன்தினம், தலைமைச் செயலகத்தில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.**

**கழக ஆதரவுடன் மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிடும், அதன் தலைவர் கலைஞானி கமல்ஹாசனும், நேற்று முன்தினம் (6.6.2025) முதல்வர் அவர்கள் முன்னிலையில் தமது வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.**

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை இடங்களுக்கான தேர்தல் வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்தத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளர்களாக பி.வில்சன், எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் என்ற கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (6.6.2025) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் கமல்ஹாசன் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டப்பேரவை கூடுதல் செயலாளருமான பி.சுப்பிரமணியனிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் பொதுச் செயலாளர் கே.ஏ.எம்.முகமது அபுபக்கர், சட்டமன்ற உறுப்பினர் தி.இராமச்சந்திரன் ஆகியோர் உள்ளனர்.

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்கள் நேற்று முன்தினம் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

சென்னை தலைமைச்செயலகத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், தேர்தல் நடத்தும் அலுவலரான சட்டப்பேரவை கூடுதல் செயலாளர் சுப்பிரமணியத்திடம், தங்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தனர்.

இதேபோன்று, தி.மு.க. சார்பில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட மாநிலங்களவை இடத்தில் போட்டியிடும் அக்கட்சியின் தலைவர் கலைஞானி கமல்ஹாசனும் நேற்று முன்தினம் வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்.

இந்த நிகழ்வுகளில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மக்களவை தி.மு.க. குழுத்தலைவரும், கழகப் பொருளாளருமான டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத்தலைவரும், கழக துணைப்பொதுச் செயலாளருமான கனிமொழி கருணாநிதி, அமைச்சர்கள் எ.வ.வேலு, இரா.ராஜேந்திரன், பி.கே.சேகர்பாபு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைவர் பெ.சண்முகம், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் பொதுச் செயலாளர் முகமது அபூபக்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்ற உறுப்பினர் தி.இராமச்சந்திரன், தமிழ்நாடு சிறுபான்மையினர் நல ஆணைய முன்னாள் தலைவர் வின்சென்ட் சின்னதுரை உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

மாநிலங்களவைத் தேர்தலில் வேட்புமனு தாக்கல் வரும் திங்கட்கிழமையுடன் முடிவடைய உள்ள நிலையில், வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை ஜூன் 10ஆம் தேதி நடைபெற உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

---

### இஸ்லாமியர்களின் சமூக - கல்வி - பொருளாதார உரிமைகளுக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் சகோதர உணர்வோடு

# இஸ்லாமிய மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த ‘பக்ரீத்’ திருநாள் நல்வாழ்த்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, ஜூன் 8-**

**இஸ்லாமியப் பெருமக்கள் ‘தியாகத் திருநாள்’ எனக் கொண்டாடும் ‘பக்ரீத்’ திருநாளில் இஸ்லாமியர்களுக்கு தமது வாழ்த்தினைத் தெரிவித்துச் செய்தி வெளியிட்டார், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**அவ்வாழ்த்துச் செய்தியில், முதல்வர் அவர்கள், “இஸ்லாமிய மக்களின் சமூக - கல்வி - பொருளாதார உரிமைகளுக்காகத் தொடர்ந்து உழைத்து வரும் சகோதர உணர்வோடு, இஸ்லாமிய மக்களுக்கு எனது நெஞ்சார்ந்த ‘பக்ரீத்’ திருநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்” என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பக்ரீத் திருநாள் வாழ்த்துச் செய்தி வருமாறு:-

தியாகத்தையும் பகிர்ந்துண்ணும் பண்பையும் போற்றும் பக்ரீத் திருநாளைக் கொண்டாடிடும் இஸ்லாமியச் சகோதரர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

இஸ்லாமியர்களின் இருபெரும் திருநாள்களில் ஒன்று பக்ரீத். புத்தாடை உடுத்தி, உணவினை வறியவர்க்கு ஒரு பகுதியையும், நண்பர்களுக்கு ஒரு பகுதியையும் பகிர்ந்தளித்துக் கொண்டாடும் பெருநாள்.

இஸ்லாமிய மக்களுக்காக இடஒதுக்கீடு, கல்வி உதவித்தொகை, நங்க நல்லூரில் ‘ஹஜ் இல்லம்’ என அவர்களின் சமூக, கல்வி, பொருளாதார மேம்பாடு மற்றும் உரிமைகளுக்காகத் தொடர்ந்து பணியாற்றும் சகோதர உணர்வோடு அனைத்து இஸ்லாமிய சகோதர, சகோதரிகளுக்கும் எனது அன்பான பக்ரீத் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

---

# பெண்ணையாறு நதிநீர்ப் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைத்திடுவீர்!

## ஒன்றிய அரசுக்கு – தமிழ்நாடு அரசு கோரிக்கை!

சென்னை, ஜூன் 8–

பெண்ணையாறு நதிநீர் பங்கீடு தொடர்பாக தீர்ப்பாயம் அமைக்குமாறு ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

தமிழ்நாடு மற்றும் கர்நாடகா இடையே பெண்ணையாறு நதி நீரை பங்கிடுவதில் உடன்பாடு ஏற்படாமல் இருந்து வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக, ஒன்றிய நீர்வளத்துறை அமைச்சர் சி.ஆர்.பாட்டீலை, தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் துரை முருகன் டெல்லியில் அண்மையில் சந்தித்து ஆலோசனை நடத்தினார். கர்நாடக ஆற்றின் மீதும் அதன் துணை நதியான மார்க்கண்டேய நதி மீதும் உள்ள திட்டங்கள், 1892 மற்றும் 1933 ஆம் ஆண்டுகளில் மெட்ராஸ் மைசூர் ஒப்பந்தங்களை மீறுவதாக அமைந்துள்ளதாக, இதன் காரணமாக தமிழ் நாட்டின் நலன்கள் பாதிக்கப்படுவதாக, தமிழ்நாடு அரசு தொடர்ந்து வாதிட்டு வருகிறது. உச்சநீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து இரு மாநிலங்களின் தரப்பில் சார்பில் பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை குழுக்கள் அமைக்கப்பட்ட போதிலும், இந்த விவகாரத்தில் தீர்வு ஏற்படவில்லை என்று தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

எனவே, உச்சநீதி மன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைப்படி, இந்த பிரச்சினைக்கு ஒரே தீர்வு தீர்ப்பாயம் அமைப்பதே என்று ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு அரசு கோரிக்கை விடுத்துள்ளது.